بسم الله الرحمن الرحيم



HADHRAT MUHYI-UD-DIN AL-KHALIFATULLAH
MUNIR AHMAD AZIM

**FRIDAY SERMON**

05 APRIL 2019

(14 RAJAB 1440 AH)

# WRONG CONCEPT OF JIHAD IN ISLAM

## இஸ்லாத்தில் ஜிஹாத் பற்றிய தவறான கருத்து

**TAMIL VERSION / தமிழ் பதிப்பு**

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவுசும், அல்.ஃ.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

ஒரு மதம் இயல்பறிவுடன் ஒன்றிணைந்து செல்லும் பொழுதுதான் அம்மதம் ஒரு மதம் என்னும் பெயருக்கு தகுதி பெறுகிறது. இதன் மூலம் அம்மதத்திற்கு வெல்ல முடியாவிட்டால், அதன் குறைபாடுகளை சமாளிக்க வாளைப் பயன்படுத்த வேண்டுமென்றால், அதன் மோசடியை நிரூபிக்க வேறு எந்த வாதமும் தேவையில்லை. மட்டுமல்ல அம்மதம் அதன் குறைப்பாடுகளை சமாளிக்க வாளைபயன்படுத்திக்கொண்டால், அது தனது இலக்கை அடையும் முன் அதன் கழுத்தை அவ்வாள் அறுத்துவிடும். இஸ்லாத்தின் ஆரம்பகட்டங்களில் வாள் பயன்படுத்தப்பட்டது என்ற ஆட்சேபனை, இந்த காலகட்டத்தில் நிலவும் நிலைமைகளின் அறியாமையை அடிப்படையாக்கி

கொண்டவையாகும். ஜிஹாத் என்பது சட்ட பூர்வமான ஒன்று என்பது உறுதிபடுத்தப்பட்டதாகும். விலகி நிற்பவர்களை ஒன்று சேர்க்க வாளை பயன்படுத்துவதை இஸ்லாம் ஒருபோதும் அனுமதிக்கவில்லை. மத காரியங்களில் கட்டாயப்படுத்துவதை திருக் குர்-ஆன் தடைசெய்கிறது.

## WHY WAS THE SWORD USED?

## ஏன் பின்னர் வாள் பயன்படுத்தப்பட்டது?

எந்த சூழ்நிலையானாலும் சரி, வாளினை பயன்படுத்தி மதத்தை பரப்புவதுடன் எந்த தொடர்பும் இஸ்லாமுக்கில்லை. மாறாக அவை உயிர் பாதுகாப்புடன் தொடர்புடையவையாகும் அவற்றை இவ்வாறு சுருக்கமாகக் கூறலாம், அரேபியாவின் பாலைவனத்தில் வசிப்பவர்கள் காட்டு மிராண்டிகளாக இருந்தனர். நல்லதை கெட்டவற்றிலிருந்து வேறுபடுத்த தெரியதவர்கள். புதியதாக உதயம் கொண்ட இஸ்லாமின் மீது அவர்கள் வெறுப்புடையவர்களாக இருந்தனர். மட்டுமின்றி அதன் மோசமான எதிரிகளாக அவர்கள் மாறிவிட்டனர். இந்த வெறுப்புக்கான காரணத்தை எளிதில் நமக்கு புரிந்து கொள்ள முடியும்.

இறைவனின் ஏகத்துவம் மற்றும் இஸ்லாமின் உண்மைகளைக் குறித்து ஆரம்பகால முஸ்லீம்கள் முன்வைத்த வாதங்கள் மொக்கவை சார்ந்த மக்களின் சிலை வணக்கங்களுக்கும் அதன் சுற்றுப்புறங்களுக்கும் பேரழிவை ஏற்படுத்திவிடும் என்று அவர்கள் எண்ணினார்கள். இறைபடைப்பினங்களில் மிக உன்னதமான மனிதன் ஒரு கல்லுக்கு வழிபட்டு, அதன்முன்பு அடிபணிவது நியாயமற்றது என்பதை இந்த பகுதியில் வசிப்பவர்கள் விரைவில் உணர்ந்துக்கொண்டனர் புதியதாக தோன்றிய இம்மார்க்கத்தை பின்பற்றுபவர்களின் வாதங்களை எதிர்கொள்ள மொக்கா மக்களுக்கு முடியவில்லை. நியாயத்தன்மையினை கொண்ட மக்கள் அனைவரும் இஸ்லாத்தில் இணைய விரைந்தனர். குடும்ப உறவுகள் முறிந்தது. மகன் பெற்றோரிடமிருந்தும், சகோதரர் சகோதரரிடமிருந்தும் பிரிந்தனர். இது மெக்கா மக்களை கோபமூட்டியது. தங்களின் முன்னோர்களின் நம்பிக்கைக்கு கேடு

விளைவிக்கும் இந்த புதிய மார்கத்தில் இணைவதிலிருந்து மக்களை தடுத்துக் கொள்வதே ஏகவழி என்று அவர்கள் எண்ணினார்கள். தீவிர நடவடிக்கைகளுடன் அவர்கள் முன்சென்றனர். அதன் விளைவாக புதிய முஸ்லீம்கள் கொடூரமாக துன்புறுத்தப்பட்டனர். இஸ்லாமின் ஆரம்பகால வரலாற்றில் நாம் பார்வையிடுவோமேயானால், அரபிகளின் காட்டுமிராண்டித்தனமும் கொடூரவும் எந்த அளவு கடுமையாக இருந்து என்பதை நமக்கு உணர முடியும். புதியதாக நம்பிக்கை கொண்டவர்களில் எத்தனை பேர்கள் கெடூரமாக கொலை செய்ப்பட்டனர். ஆனால் இந்த நடவடிக்கைகளால் இஸ்லாமில் இணைவதிலிருந்து அவர்களை தடுக்க முடியவில்லை. இத்தகைய நடவடிக்கைகள் மூலம் இஸ்லாமை அழிக்க முடியாது என்று உணர்ந்த பகைவர்கள், திருநபி (ஸல்) அவர்களை கொலை செய் திட்டமிட்டனர். ஆனால் அவர்களின் அத்திட்டங்கள் தோல்வியுற்றது, ஏனென்றால், எல்லாம் வல்ல அல்லாஹ், அன்னாரை மெக்காவிலிருந்து மதினாவுக்கு அனுப்பி காப்பாற்ற முடிவு செய்தான். ஆனால் கொடூரமாக துன்புறுத்தப்பட்டிருந்தும் அம்மக்களின் தொடர்ச்சியான முன்னேற்றத்தை அறிந்த பகைவர்களுக்கு தூங்க முடியவில்லை, எனவே மதினாவிலுள்ள முஸ்லீம்களை அவர்கள் பின்தொடர்ந்தனர். அவர்களை அழிக்காமல் அமைதியியை பெற இயலாது என்ற மனநிலையியை அவர்கள் அடைந்தனர். இத்தருணத்தில் இஸ்லாத்தின் நடவடிக்கை என்பது தங்களை தற்காத்து கொள்வதாக மட்டும் இருந்தது. முஸ்லீம்களுக்கு தங்கள் உயிரினைப் பாதுகாக்க அனுமதி கிடைத்தது. எந்த தவறு செய்ததன் பெயரில் முஸ்லீம்களை அவர்கள் கொடூரமான நிலையில் படுகொலை செய்தனர்? வழக்கமாக துன்புறுத்துபவர்கள், அவர்களின் செயல்பாட்டின் விலையை ஏன் செலுத்தக்கூடாது? இஸ்லாமிய நம்பிக்கையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வாளை பயன்படுத்தினார்கள் என்று குற்றச்சாட்டை எழுப்புகின்றவர்களுக்கு இத்தகைய தவறான எண்ணங்கள் இல்லாமல், ஆதாரத்தின் அடிப்படையில் வாதிட முடியுமா?

இஸ்லாத்திற்கு எதிரான இத்தகைய ஆட்சேபனைகளை ஆதரிப்பவர்கள், உண்மைகளை தெரிந்திருந்தும் அதனை மறைத்துக் கொள்கின்றனர். இது மிக கடுமையான அநீதியாகும். எவ்வாறாயினும், இஸ்லாமுக்கு எதிரான இந்த அநியாயமான குற்றச்சாட்டுக்கு முஸ்லீம் மற்றும் கிறிஸ்தவ மிஷனரிகள் ஆகிய இருவரும் காரணம் என்பது மறுக்க முடியாத உண்மைதான்.

ஒருபுறம் அறிவற்ற முல்லாக்கள் தங்களது தொடர்சியான பிரசங்கங்கள் மற்றும் ஃபத்வாக்களை கொண்டு ஹிஜாத் என்னும் இந்த தவறான கோட்பாட்டை ஆதரிப்பதற்கு சாதாரணமான மக்களை ஊக்குவித்தனர். மறுபுறம் அறிஞர்களாக கருதப்பட்ட கிறிஸ்தவ மிஷனரிகளின் ஆட்சேபனைகள் இந்த தவறான கோட்பாட்டை மட்டும் குறிக்கோளாக கொண்டிருந்தது. ஆதாரங்களை அடிப்படையாக்கி கொண்டிருந்ததால், அதன் உண்மையான பொருளைக் குறித்து சதாரண மக்களுக்கு சரியான முறையில் புரிந்துக் கொள்ள முடியாமல் இருந்தது. இந்த முல்லாக்களின் ஃபத்துவா என்பது இஸ்லாமிய வரலாற்றைக் குறித்த அறியாமையின் விளைவு என்றும் அந்த நேரத்தில் நிலவிய சூழ்நிலைகள் இன்று நிலவவில்லை என்றும் மிஷனரிகள் நேர்மையாக அறிவித்திருந்திருந்தால் ஜிஹாத் என்னும் இந்த தவறான கருத்து பூவுலகிலிருந்து என்றே அழிந்து போயிருந்திருக்கும். ஆனால் அத்தகைய நிலைப்பாட்டின் விளைவுகளைக் குறித்து துரதிர்ஷ்டவசமாக இந்த முல்லாக்கள் சற்றும் யோசிக்கவில்லை. சொந்த மார்க்கத்தின் உண்மையை புரிந்து கொள்வதற்கு வழிவகுக்காமல், அதற்கு எதிராக அவர்கள் முகத்திரையை போட்டனர். பகைவர்களாகிய அரபிகள் தங்கள் அடக்கு முறை மற்றும் துஷ்பிரயோகங்களின் அனைத்து வரம்புகளையும் தாண்டாத வரையில், தங்களை தற்காத்துக் கொள்ள, இஸ்லாத்தின் எதிரிகளை கொலை செய்வதற்கான அனுமதி முஸ்லீம்களுக்கு வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் இஸ்லாத்தில் இணைந்து, அவர்கள் தங்கள் கடந்தகால தவறுகள் மற்றும் குற்றங்களை அங்கீகரித்து, மனந்திரும்பிக் கொண்டால் அவர்களுக்கு மன்னிப்பு வழங்க வேண்டும் என்பதும் அவர்களின் கடந்த கால குற்ற நிகழ்வுகளை மறந்து சகோதரத்துவ உறவுடனும் ஒற்றுமையுடனும் வாழ வேண்டும் என்பதும் இஸ்லாமிய போதனைகளாகும். ஆனால் இஸ்லாமை எதிர்ப்பவர்கள் புதிய மதத்தை ஏற்றுக் கொள்ளதவர்களை கட்டாயப்படுத்தி கொள்ளவேண்டும் என்ற தவறான கருத்தை பிரச்சாரம் செய்கின்றனர்.

இஸ்லாத்திற்கும், மனித இயல்புக்கும் எதிரான கோட்பாடுகளை கற்பித்து இஸ்லாத்தின் அழகினை முழு உலகத்திலிருந்தும் பறித்து, இஸ்லாத்தின் உண்மையான வாழ்க்கை முறைகளிலிருந்து மானிட குலத்தை வழி தவற செய்ததன் பெறுப்பு இந்த முல்லாக்களுக்கு மட்டும்தான்.

உண்மையில், உண்மைகள் இதற்கு நேர்மறானவை. இச்சூழ்நிலையில் எவ்விதமான கட்டாயவுமில்லை. மரணத்தை தண்டனையாக பெற்றிருக்க வேண்டியவர்களுக்கு மட்டும் அது வழங்கப்பட்டது. நியாயமான தண்டனைக்கும், சட்டபூர்வமான கடமைக்கும் இடையில் தலையிடுவது முற்றிலும் அபத்தமாகும். உண்மையில் அவர்கள் மரணதண்டனைக்கு தகுதியானவர்கள்தான். ஏனெனில் அவர்கள் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கொள்கையில் நம்பிக்கை கொள்ளாததால் அல்ல. மாறாக அவர்கள் அப்பாவிகளான அநேகமக்களை இரக்கமின்றி கொலை செய்ததனால்தான். சட்டத்தின் அனுமதியை அவர்கள் மீது பயன்படுத்தப்பட்டது. ஆனால் இறைவனின் கிருபை எல்லையற்றதாகயிருப்பதால், மனந்திரும்ப அவர்களுக்கு இன்னொரு வாய்பையும் அளிக்கப்பட்டிருந்தது. **இத்தகைய அவநம்பிக்கையாளர்களைக் கொலை செய்ய வேண்டும் என்ற நோக்கம் இஸ்லாத்திற்கு இல்லை என்று மட்டுமல்ல, மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த குற்றவாளிகளுக்குக் கூட மன்னிப்பின் வாசலை இஸ்லாம் திறந்து வைத்திருந்தது என்பதை இது தெளிவாக காட்டுகிறது.**

வேறு பிரச்சனைகளையும் இஸ்லாம் சந்தித்தது. அந்த காலங்களில் மததப்பெண்ணங்கள் மிக வலுவாக இருந்தன. ஒரு கோத்திரத்தைச் சார்ந்த ஒருவர் புதிய நம்பிக்கையை ஏற்றுக் கொண்டால், அவரை அச்சுறுத்தி சித்திரவதை அல்லது கொலை செய்வார்கள். துன்புறுத்தல் மிகவும் கடுமையாகயிருந்தது. வாழ்க்கை ஒரு சுமையாக மாறியது. சுதந்திரமாக மதநம்பிக்கையிலும் செயல்களிலும் ஈடுபட இஸ்லாம் முன்வந்தது. அதற்கான தடைகளையாவும் நீக்கிகொள்வதற்கு தற்காப்பு என்ற நிலையில் இஸ்லாமிற்கு போர் செய்ய வேண்டியிருந்தது.

இஸ்லாமிய முதல் நூற்றாண்டின் போர்கள் நான் விவரித்த இந்த கொள்கைகளின் கீழ் வருகின்றன. இஸ்லாம் அதன் பிரச்சாரத்திற்காகவோ அல்லது வேறு எந்த காரணத்திற்காகவோ வாளை ஒருபோதும் பயன்படுத்தவில்லை. அதன் நிலைநிற்பை அழிக்க பகைவர்கள் நிரந்தரமாக முயற்சிக்களை மேற்கொண்டார்கள். அச்சூழலில் இஸ்லாம் அதன் உயிர்வாழ்வை நிலைநிர்த்தி, தன்னை தற்காத்துக்கொள்ள வேண்டியிருந்தது. ஆயுதங்களை பயன்படுத்துவது தவிர்க்க முடியாத கடமையாக மாறியது. ஆயுதங்களை பயன்படுத்த வேண்டும் என்பது இஸ்லாம் சுயமாக தேர்வு செய்த

ஒன்றல்ல. மாறாக அதன் பகைவர்கள் ஆயுதங்களை ஏந்திருந்ததால், இஸ்லாமிற்கும் ஆயுதங்களை ஏந்துவது தற்காப்பு என்னும் மிக பெரிய கடமையாக மாறியது.

இதைத் தொடர்ந்து இஸ்லாத்தின் உண்மையான கொள்கை மற்று போதனைகளை மக்கள் மறந்து விட்டனர். அதன் விளைவாக ஜிஹாத்தின் கோட்பாடு மக்கள் மத்தியில் வித்தியாசமாக விளக்கப்பட்டுவிட்டது. இந்த அறியாமை, அந்த மதத்திற்கு எதிராக வளர்ந்து மக்கள் மத்தில் வெறுப்பை ஏற்படுத்தியது. அந்த குற்றத்தை ஒருபோதும் இஸ்லாமின் மீது சாட்ட முடியாது. ஏனெனில் அதன் உற்பத்தி தூய்மையானது மற்றும் ஆரோக்கியமானது. ஆனால் மனித வாழ்க்கையை மதிக்காத வைராக்கியத்தன்மையுடைய முட்டாள்களால் இந்த தவறான கோட்பாடு இஸ்லாத்தின் மீது சூட்டப்பட்டது. அப்பொழுது சிந்திய அப்பாவிகளின் இரத்ததில் இப்போதுவரை அவர்கள் திருப்தியடையவில்லை. அவர்களின் கருத்துப்படி இப்போதும் அவர்களுக்கு இரத்த வெறிபிடித்த ஒரு மதசீர்த்திருத்தவாளரைத் தேவையாக இருக்கிறது. அவர்களின் மஹ்தியும், மஸீஹும் இரத்த வெறிபிடித்த சீர்திருத்தவாளர்களாவார்கள். அந்த இரத்த வெறி பிடித்த மஹ்தி மற்றும் முஸீஹினை சுட்டிகாட்டி இஸ்லாமை முற்றிலும் வெறுக்கத்தக்க விதமான ஒரு சித்திரத்தை அவர்கள் உலகெங்கும் பிரச்சாரம் செய்கின்றனர். அக்காரணத்தால், இஸ்லாம் எப்போதும் அதனை பரப்பும் பணிகளுக்காக வற்புறுத்தல் மற்றும் வன்முறைகளை கையாளியது என்றும் மனிதர்களின் இதயங்களை வென்றெடுப்பதற்கான எந்தவொரு உண்மை மற்றும் நன்மையினைக் கொண்ட குறிப்பையும் இஸ்லாம் வழங்கவில்லை என்றும் அனைவரும் நம்புகின்றனர்.

இத்தகைய கருத்துக்களை ஆதரிப்பவர்கள் இஸ்லாம் ஏற்கனவே அனுபவித்த அவமானத்திலும் வீழ்ச்சியிலும் போதுமான அளவு திருப்தி அடையவில்லை என்று தெரிகிறது. மேலும் இஸ்லாமிற்கு அவமானம் மற்றும் வீழ்ச்சி வரவேண்டும் என்று அவர்கள் விரம்புகின்றனர். இத்தகைய மக்கள் அவமானத்தின் ஊற்றாக இருக்கின்றனர். குறிப்பாக அவர்கள் இஸ்லாத்தை நிந்திப்பவர்களாக இருக்கின்றனர். ஆனால் இப்போது தனது மார்க்கம் அவமானத்திற்குள்ளாகுவதை இறைவன் விரும்பவில்லை.

இஸ்லாத்தின் இத்தகைய பகைவர்கள், உண்மை என்ன என்பதைக் குறித்து ஆராய்வதற்கு எந்த விதமான உற்சாகத்தையும் காட்டுவதில்லை என்பது மிக துரதிஷ்டவசமான ஒன்றாகும். ஆரம்பகாலங்களில் இஸ்லாமை பரப்புவதற்கு ஆயுதங்களைப் பயன்படுத்த வேண்டியதாக இருந்தது என்ற கருத்துமாக முல்லாக்கள் முன் செல்லுகின்றனர்.

இத்தகைய குற்றச்சாட்டுகளிலிருந்து இஸ்லாம் மீட்சியை பெறுவதற்கான நேரம் நெருங்கியிருக்கின்றது. இந்த தீமைகளை பிழுதெறிய முல்லாக்கள் ஒன்றுபட்டால், அதற்கு அவர்கள் முன்வந்தால் அது அவர்கள் தங்களது மக்களிடம் செய்யும் மிக பெரிய நன்மையாகும். பிற நாடுகளும் மக்களும் இஸ்லாத்திற்கு எதிராக வெளிப்படுத்தும் வெறுப்பை நமக்கு புரிந்துக்கொள்ள முடிகிறது. ஜிஹாத் என்ற இந்த கருத்து நீடிக்கும் வரை அவர்களின் அந்த நிலை ஒருபோதும் மாறுவதில்லை. அவர்களின் இந்த தவறான புரிதல்களுக்கு முஸ்லீம்களைத்தான் குற்றம் சொல்ல வேண்டும். இஸ்லாத்தின் அழகை முழுவுலகிலிருந்தும் பறித்த பொறுப்பு இந்த முல்லாக்களுக்குத்தான். மனித இயல்புக்கு விரோதமான கோட்பாடுகளை இந்த முல்லாக்கள் கற்பித்தனர். இறைவனிடமிருந்து வந்தது என்று உரிமைகோரும் ஒரு மதத்திற்க்கு, அதன் போதனைகளை மனிதர்களின் இதயங்களில் ஊடுருவுவதற்கு வாள் தேவை என்று கூறினால் அந்த மதம் இறைவனிடமிருந்து வந்ததாக எவ்வாறு கூறமுடியும்?

**எந்தவொரு நல்ல ஆன்மாவையும் இஸ்லாமிய உண்மையிலிருந்து விரட்டுவதற்கு இத்தகைய கருத்தாய்வு போதுமானது. இத்தகைய தீமைகள் ஒரு சீர்திருத்தவாளரின், ஒரு கலீ∴பத்துல்லாஹ்வின் வருகையை தேவைப்படுகிறது. இஸ்லாத்தின் இன்றைய உள் நிலைபற்றி ஒரு கண்ணோட்த்தில், இஸ்லாம் மிக பெரிய குழப்பம் மற்றும் ஏமாற்றதை கொண்டிருப்பதாக நமக்கு உணரமுடியும்.**

**இந்த தாழ்மையான ஊழியரின் வருகை என்பது நம்பிக்கையைக் குறித்து உங்களுக்கு விளக்கவும், இறைவன் மற்றும் மனித இயல்பை பற்றிய உண்மைகளை வெளிப்படுத்தவும் ஆகும். இஸ்லாமிய உலகிற்கும் முழு மானிட குலத்திற்கும் நான் அழைப்பு விடுக்கிறேன். இறைசித்தத்திற்கு நீங்கள் கீழ்படிந்தால் உங்களுக்க அனைத்தையும் பெற்றுவிடலாம். நீங்கள் உங்கள் வாழ்கையை முழுமையாக அர்பணித்துவிடுங்கள், இறைவன் இந்நூற்றாண்டில்**

**தேர்ந்தெடுக்கப்பட்ட அவனது பிரதிநிதிக்கு கட்டுபடுங்கள்.** இன்ஷா அல்லாஹ். ஆமீன்.

## ISRA & MI'RAJ
## இஸ்ரா மற்றும் மிராஜ்

எனது பேருரையை முடித்துக்கொள்வதற்குமுன் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இஸ்ரா மற்றும் மிராஜ் தரிசனங்களைபற்றிய சில வார்த்தைகளை கூற விரும்புகின்றேன். உண்மையில் இவை இரண்டும் எல்லாம் வல்ல இறைவனிடமிருந்து அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெற்ற மிக முக்கியமான தரிசனமும் தகவல்களும் ஆகும். உண்மையில் இது ஆன்மீகமான ஒரு பயணமாகும். உடல் ரீதியிலான பயணமல்ல. அந்த ஆன்மீக பயணத்தின் போதுதான் அவர் மற்றும் அவரது சமுதாயத்தினர் ஒரு நளைக்கு ஐந்து முறை தொழுகையை கடைப்பிடிக்குமாறு அல்லாஹ் கட்டளையிட்டான்.

இந்த அருள்மிக்க நாட்களுக்கு நாம் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உடல் ரீதியில் பயணங்களை மேற்கொண்டதால் அல்ல. மாறாக அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் இடையிலான உரையாடலுக்குதான் முக்கியத்துவம் அளிக்கவேண்டும். எப்போதும் அது சிறப்பு வாய்ந்ததாக இருக்கும். இந்த அனுபவங்கள் முற்றிலும் ஆன்மீகமானவை, விழிப்புக்கும் தூக்கத்திற்கும் இடையிலான ஒரு நிலை. அதனை அரபிமொழியில் கஷ்ப் என்றும் தமிழ்மொழியில் தரிசனம் என்றும் கூறலாம். இறுதி மரணத்தை அடையாதவரையில் உடல் ரீதியில் மனிதனுக்கு ஒரு போதும் ஆகாயத்தில் செல்லமுடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். மரணத்திற்குபிறகு அவரது சடலம் பூமியில்தான் இருக்கும் அதேகணம் ஆன்மா திரும்பிச் செல்ல வேண்டிய இடத்திற்கு செல்கிறது.

அவநம்பிக்கையாளர்கள் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வானத்தின் மீது நீர் ஏறிச்சென்று அவர்களுக்கு ஒரு நூலை கொண்டுவர தேவைப்பட்டபோது அவர்களுக்கு அன்னார் இளித்த பதிலாவது **"நான் இறைத் தூதராகிய ஒரு மனிதனே தவிர வேறெதுவுமாக இல்லை" (17:94)**

கஷ்.ஃ.ப் (Kashf) என்பது உறுதியான மரணமல்ல, ஆன்மா ஆன்மீக ரீதியில் விழித்திருக்கும். அல்லாஹ்வுடன் அது இணைந்திருக்கும். அவனுடைய வெளிப்பாடு மற்றும் இறைசக்தியின் மூலம் அவர் ஒரு தற்காலிக ஆன்மீக ஆனந்த உலகில் ஈர்கப்பட்டிருப்பார். அ்ண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பரிபூரணமான கஷ்.ஃ.பின் நிலையில் வாழ்ந்தார். ஏனென்றால் அல்லாஹ் அன்னாரை ஏழு வானங்களைக் கடக்கவைத்து நெருக்கம் மற்றும் அன்பான முறையில் தன்னை சந்திக்க வைத்தான்.

ஒரு சஹீஹான கதீஸில் இரண்டு முக்கியமான நிகழ்வுகளை விவரிக்கபட்டுள்ளது. திரு தூதர் (ஸல்) அவர்கள் கஷ்.ஃ.ப் வழியாக பயணம் மேற்கொண்டு அல்லாஹ்வின் அருகாமையை அடைந்தபோது, அன்னாரின் வெளிப்படையான கண்களுக்கு அல்லாஹ் காட்சியளிக்கவில்லை. ஏனெனில் அல்லாஹ் திருக்குர்-ஆனில் கூறுகின்றான். **“பார்வைகள் அவனை அடைய முடியாது. ஆனால் அவனோ எல்லாப் பார்வைகளையும் அடைகிறான்” (6:104)**

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் விவரிக்கிறார். அதாவது **“திருநபி (ஸல்) அவர்கள் தனது இதயத்தின் மூலம் அல்லாஹ்வை இரண்டுமுறை பார்த்தார்” (முஸ்லீம்)**

இந்த தரிசனங்கள், இறை அத்தாட்சிகள் மட்டுமாகும். ஆனால் அவர் அல்லாஹ்வை தனது உண்மையான வடிவத்தில் காணவில்லை. அன்னாரின் ஆன்மீக கண்களால் அல்லாமல் உடல் ரீதியிலான கண்களால் காணவில்லை. அபூதர் (ரலி) அவர்களின் கருத்தின் படி, **“திருதூதர் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வை பார்த்தது ஒரு ஒளிவீசும் வெளிச்சத்தை போன்றாகும்”.** இந்த தரிசனங்களில் ஒன்று காபாவில் வைத்தும் மற்றொன்று அவரது உறவினரான உம்மைஹானி வீட்டில் வைத்தும் நிகழ்தது. இந்த இரண்டு தரிசனங்களும் விழிப்பிற்கும் தூக்கத்திற்கும் இடையே உள்ள நிலையில்தான் நிகழ்ந்தது.

அன்னாரின் கண்கள் தூக்கத்தில் இருந்திருந்தாலும் அவரது இதயமும் ஆன்மாவும் விழித்திருந்தது. அல்லாஹ் எதுவொன்றை எண்ணினானோ, அதனை அனனார் பார்வையிட்டார். உடல் ரீதியில் நேரடியாக காட்சியளிப்பதைப்போன்று அவர் பார்வையிட்டார்.

இன்ஷா அல்லாஹ்! இந்த காரியத்தை புரிந்துகொள்ள வேண்டியது மிக முக்கியமாகும் ஏனென்றால், மனிதனால் ஒரு தீர்க்கதரிசியால் கூட இயற்கையின் விதிகளை மீற முடியாது. அல்லாஹ் பூமியில் சில விதிமுறைகளை நிறுவியுள்ளான். எல்லா மனிதர்களும் தீர்க்கதரிசிகள் கூட மதிக்க வேண்டிய சில விதிமுறைகளை அல்லாஹ் நிறுவியுள்ளான். தீர்க்கதரிசிகள் கூட அவ்வப்போது மறக்கலாம், தூங்கலாம் சாப்பிடலாம், தவறு செய்யலாம் ஆனால் உண்மையில் அவர்கள் நீண்ட காலம் அத்தவறுகளில் இருக்கமாட்டார்கள். ஏனெனில் அல்லாஹ் தனது வெளிப்பாடுகள் வழியாக அவர்களில் திருத்தத்தை ஏற்படுத்துகின்றான். பின்னர் அவர்களை முன்னேற்றத்தின் பாதையில் கொண்டு செல்கின்றான். அதன் விளைவாக அவர்கள் வாழ்கை தக்வாவில் செழிக்கிறது. அவர்கள் தங்கள் சுமைகளையாவும் அல்லாஹ்விடம் ஒப்படைக்கின்றனர். பூமியில் அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற நிலையில் அவர்களின் ஆற்றல்களை அனைத்தும் அல்லாஹ்விடம் அற்பிக்கின்றனர்.

அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீதும் இற்றூற்றாண்டின் அன்னாரின் அனைத்து உம்மத்தின் மீதும் அல்லாஹ் அருள்கொடைகளை பொழிவானாக! திரு நபி (ஸல்) அவர்களின் தியாக்களைக்குறித்து நமக்கு சிந்திப்போம். அன்றாடவாழ்க்கையில் அத்தகைய தியாகங்கள் புரிய நமக்கு முயற்சிப்போம். அது வழியாக அல்லாஹ்வின் அன்பினை நமக்கு அடைந்துவிடுவோம். இன்ஷா அல்லாஹ். ஆமீன்

**Translated by:**

*Naib Amir - Azim Ahmad*
*7339689239*

## ISSUED BY


**R. JAMALUDDIN RAOTHER SAHIB**
Amir Kerala South Zone, India
Kerala contact
No: 9447001832

**SIRAJ DEEN SAHIB**
Amir Tamilnadu state, India
Tamilnadu Contact
No: 7502272774



## PUBLISHED BY:

**JAMAAT-UL-SAHIH-AL-ISLAM**
**KALIAKKAVILAI BRANCH**
**(TAMILNADU AND KERALA BORDER)**
**Ph No: 9789180817, 9171977109**